ISSN:2582-9599



# நேர்காணல்கள் வெளிப்படுத்தும் நாட்டுப்புறக் கலைஞர்களின் பண்பாடும் வாழ்க்கை முறையும்

42

**வி.நித்யா**

**தமிழ்த்துறை**

**வேளாளர்மகளிர்கல்லூரி(தன்னாட்சி)**

**ஈரோடு -12**

**ஆய்வுநோக்கம்**

நேர்காணலின் முறையையும் சிறப்பையும் அறிந்து கொள்வதோடு அவை வெளிப்படுத்தும் கலைஞர்களின் பண்பாட்டுக் கலைச்சிறப்பினை அறிதல்

**ஆய்வுச்சுருக்கம்**

கேள்விகள் கேட்டு பதில்களைப் பெறும் ஓர் உரையாடல் முறையாகும். நாட்டுப்புறக்கலைஞர்களை நேர்காணல் மூலம் செய்திகளைச் சேகரித்து இதழ்களில் வெளியிடுவதனால் அவர்களுடைய கலைச்சிறப்பினையும் அவர்களின் வாழ்க்கை முறைகளையும் அறிந்துகொள்ளலாம். சமூகத்தில் அவர்களின் நிலைமையினையும் கலைக்காக தங்களை அர்பணித்த பாங்கினையும் இன்றைய இளையதலை முறையினருக்கு எடுத்துக்கூறி அக்கலைகளை அழிவிலிருந்து மீட்டெடுக்கலாம்.

**திறவுச்சொல்**

நேர்காணல் – கலைஞர்கள் – நாட்டார்தெய்வங்கள் – பறையாட்டம் – கணியன்கூத்து – ஒயிலாட்டம் – சொல்லடைகள்- தேவராட்டம்- காவடி - களியலாட்டம்,

**முன்னுரை**

“நேர்காணல் என்பது கேள்விகள் கேட்டுப் பதில்களைப் பெறும் ஓர் உரையாடல் ஆகும்“[1] என்று மெர்சியம் வெப்சடர் அகராதி கூறுகிறது. நேர்காணல் என்பது பொதுவாகக் கேள்விகள் கேட்கும் ஒருவரும் பதில்கள் தருபவர் ஒருவருமாக ஒன்றுக்கு ஒன்று உரையாடலாகவே இருக்கும். நேர்காணல்கள் பல்வேறு துறையில் பல்வேறு வகையில் காணப்படுகிறது.

செய்திக்கு மூலமாக இருப்பவரை அல்லது தானே செய்தியாகும் ஒருவரை நேர்காணல் கொள்வது செய்தி திரட்டுவதில் முக்கியமான ஒன்றாகும். செய்தியாளராக இருப்பவர் நேர்காணல் கொள்வதில் திறனுடையவராக இருக்கவேண்டும். நேர்காணல்கள் இல்லாமல் செய்திகள் இல்லை எனுமளவிற்குச் செய்திகளில் நேர்காணல்கள் முக்கியத்துவம் பெறுகிறது.

நேர்காணல் என்பது ஒருவரோடு தொடர்பு கொண்டு அவர் மூலமாக விபரங்களைக் கேட்டுப் பெறுவதாகும். இது நேரிலோ அல்லது தொலைபேசி வழியாகவோ அல்லது கடிதம் வழியாகவோ அல்லது தகவல்தொடர்பு சாதன வழியாகவோ இருக்கலாம். ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி நேர்காணல் என்பதற்கு ,“மனிதர்கள் நேருக்கு நேராகச் சந்தித்தல் அதாவது கூட்டம் நடத்தக் காணுதல்,

செய்தித்தாளில் பணியாற்றுகின்ற ஒருவரும் வெளியிடுவதற்காகத் தகவல்களைத் தர அவர் தேடும் ஒருவரும் கூடிப்பேசுதல்"[2] என்றுபொருள்தருகிறது.

**நேர்காணலின்நோக்கம்**

நேர்காணல் ஒவ்வொன்றும் ஏதாவது ஒரு நோக்கத்துடன் நடத்தப்பெறும். நோக்கமற்ற நேர்காணல் பொழுது போக்குப் பேச்சு போலாகிவிடும். நேர்காணல் செய்பவர் நேர்காணலின் நோக்கம் குறித்துத் தெளிவாக இருக்க வேண்டும். பொதுவாக நேர்காணல் நடத்துவதற்கான நோக்கங்கள் சில உள்ளன. அவையாவன.

1. **நட்புஅறிதல்**

   நடந்து கொண்டிருக்கும் சில சுவையான நிகழ்வுகள் குறித்த விவரம், கருத்தறிய அதனுடன் தொடர்புடையவரிடம் நேர்காணல் செய்தல்

2. **நிகழ்வுவிபரம்அறிதல்**

   நடைபெறப்போகும் முக்கிய நிகழ்வு குறித்த விபரம்., கருத்தறிய அதனுடன் தொடர்புடையவரிடம் நேர்காணல் செய்தல்

3. **கருத்துவெளிப்படுத்தல்**

   தலைவர்கள், கலைஞர்கள், சிந்தனையாளர்கள், போன்றவர்களின் ஆளுமைத்திறன், தனித்தன்மை ஆகியவற்றை வெளிப்படுத்த நேர்காணல் செய்தல்

**நேர்காணலில்வெளிப்படுபவை**

"நாட்டார் தெய்வங்கள், பெருந்தெய்வங்கள், சாத்திரங்கள், சம்பிரதாயங்கள், வழிபாட்டு முறைகள், சடங்குகள், பண்பாடு இழையோடும் அன்றாட நடைமுறைகள், கலை, இலக்கியம், கல்வி, சாதியம், திராவிடக்கருத்தியல், ஆளுமைகள் என அனைத்தையும் பற்றிய பார்வைகள் இயல்பான உரையாடல்களில் சுவையாக வெளிப்படுவதை நேர்காணலில் அனுபவிக்கலாம்"[3] என்று தொ.பரமசிவன் குறிப்பிடுகிறார்.

மேலும், "மனிதவாசிப்பு என்பது உரையாடல் மரபு சார்ந்தது. தமிழர்களின் அறிவுத் தொகுதி பெரும்பாலும் உரையாடல் மரபிலேயே வெளிப்படுகிறது. தமிழர்களுடைய மரபுவழி அறிவுத்தொகுதியினை உரையாடல் மரபிலும் அதன் உள்ளீடாக விளங்கும் பழமொழிகள், சொல்லடைகள், கதைகள் ,சடங்குகள் இவற்றின் வழியாகவே மீட்டெடுக்கமுடியும்"[4] என்கிறார் தொ.பரமசிவன்.

**நாட்டுப்புறக்கலைஞர்களின்பண்பாடுகலந்தவாழ்க்கை**

"நேர்காணல் ஒரு ஆளுமையின் பல்வேறு பரிணாமங்களை வெளிக்கொணரும் தன்மை கொண்டது. ஒருபடைப்பாளி (அல்லது) கலைஞன் நேர்காணல் மூலம் படைப்பில் சொல்ல முடியாத பல விசயங்களை வெளிப்படைத் தன்மையுடன் பேசமுடியும். ஒரு படைப்பை உள்வாங்க படைப்பாளிகளின் வாழ்வும் சூழலும் உதவக்கூடும். படைப்பின் உருவாக்கத்தை அனுபவரீதியாகச்

சொல்வதற்கு உதவக்கூடிய பணி நேர்காணலுக்கு உண்டு"[5] என்று பவுத்தஅய்யனார் கூற்றினை அடிப்படையாகக் கொண்டு நெல்லை மாவட்ட நாட்டுப்புறக்கலைஞர்கள் இருவரின் வாழ்க்கை நிலையை நேர்காணல்கள் மூலம் வெளிப்படும் தன்மையை இக்கட்டுரை விளக்க முற்படுகிறது. நாட்டுப்புறக்கலைஞர்கள் நிகழ்த்தும்ஆட்டங்களாக பறையாட்டம், ஓயிலாட்டம், தேவராட்டம், கழியல்ஆட்டம்,கரகாட்டம், காவடியாட்டம், வில்லிசை, கணியான்கூத்து, நாதஸ்வரம், வாய்பாட்டு, நாட்டுப்புறப்பாடல்கள் மற்றும் நாடகக்கலைகள் என்பவை குறிப்பிடத்தக்கவை.

**காவடியாட்டம்/ கரகாட்டம்**

நேர்காணல் – சங்கரபாண்டித்தேவர்

சந்திப்பு- முத்தாலங்குறிச்சி காமராசு

முருகக்கடவுள் வழிபாட்டில் முக்கிய இடம் பெறுவது காவடிஆட்டமாகும். உலகம் முழுவதும் முருகன் கோவில்கள் இருந்தாலும் காவடிக் காணிக்கைகள் பழனிமுருகன் கோவிலுடன்தான் தொடர்புபடுத்தப்படுகின்றன. ஏனெனில் முதல்முதலில் காவடி எடுத்த வரலாறு பழனிமுருகன் கோவிலுடன் தொடர்புகொண்டிருந்தது.

பக்தர்கள் பழனியாண்டவரிடம் குழந்தைபாக்கியம், திருமணபாக்கியம், தொழில்விருத்தி, விவசாயம்செழிப்பு, குடும்பஅமைதி, வேலை, உடல்நலம் உள்ளிட்ட பலவற்றை வேண்டிக்காவடி எடுக்கின்றனர். வேண்டுதலுக்காகவும், வேண்டுதல்கள் நிறைவேறினாலும் பக்தர்கள் காவடி எடுத்து வருகின்றார்கள். இவ்வாறு காவடி எடுத்து வரும் பக்தர்கள் மகிழ்ச்சி மிகுதியாலும், பக்திப்பெருக்கினாலும் காவடிஆட்டம் ஆடுகின்றனர்.

வழிபாட்டுக்கூறின் ஒரு அங்கமாகத் தோன்றிய காவடி ஆட்டம் பிற்காலத்தில் தொழில்முறை ஆட்டமாகவும்மாறியது."[6] என்கிறார் முத்தாலங்குறிச்சி காமராசு.மேலும், ஊத்துமலை ஜமீன் இருதாலய மருதப்பத்தேவர் கழுகுமலைக்குக் காவடி எடுத்து வரும் போதுதான், சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார் காவடி சிந்து இயற்றியுள்ளார்.அந்தக்காவடிசிந்து ஐ.நா.சபையில் எம்.எஸ்.சுப்புலட்சுமி அம்மா அவர்களால் பாடிப் புகழ் பெற்று பெருமை பெற்றது எனக்குறிப்பிடுகிறார்.[7]

காவடி ஆட்டத்தின் தொடக்கமாகக் கரகாட்டம் அமைகின்றது. பஞ்சபாண்டவர் மனைவி திரௌபதி ஆவேச நடனத்தால் அரக்கனை அழிப்பதற்காகக் கரகத்தைத் தலையில் வைத்துக் கொண்டு ஆடினாள் என்ற புராணச்செய்தி கரகாட்டத்துடன் தொடர்புபடுத்திக் கூறப்படுகிறது.

கோயில் திருவிழாக்களில் கரகம் எடுத்து வந்தால், அந்தப் பகுதியில் துன்பங்கள் எல்லாம்அழியும். மழைபொழியும். நன்மை நடக்கும் என்பது ஐதீகம்.கரகாட்டத்தின் போது சாகஸ நிகழ்ச்சிகள் மூலம் தங்கள் திறமைகளை ஆட்டக்காரர்கள் வெளிப்படுத்துவர் என்கிறார் காவடியாட்டக்காரர் சங்கரபாண்டித்தேவர்.[8] மேலும் முற்காலத்தைப் போல காவடியாட்டத்திற்கு நல்ல வரவேற்பு இல்லை என்றும் நிகழ்ச்சி தருபவர்கள் என்ன கருதுகிறார்களே அதற்கேற்ப பாடல்களை உருவாக்கிப்பாடி வரவேற்பைப் பெறுவதாகக் குறிப்பிடுகிறார்.

நாட்டார் வழக்காற்றியல் மன்றத்தில் காவடியாட்டக்கலை நிகழ்ச்சியை நடத்துவதற்கும், கல்லூரிகளில் மாணவ, மாணவிகளுக்குக் காவடியாட்டம், கரகாட்டம் சொல்லிக் கொடுப்பதற்கும், கோயில், கொடை போன்ற கிராமப்புறநிகழ்ச்சிகள் நடத்துவதற்கும், அரசின் திட்டங்களை விளக்கிப் பேசுவதற்கும் காவடியாட்ட, கரகாட்ட கலைஞர்கள் அழைக்கப்பட்டனர். அதன்மூலம் அவர்களின் வாழ்க்கைக்குச் சுமாரான வருவாய் வந்தது. ஆனால் தற்காலத்தில் அரசு ஏதாவது ஒரு விதத்தில் உதவினால் தான் நன்றாக வாழ முடியும் என்ற எதிர்பார்ப்பு அக்கலைஞர் மத்தியில் நிலவுகிறது என்பதை அரசின் முன்கோரிக்கையாக வைக்கின்றார் சங்கரபாண்டித்தேவர்.[9]

**ஒயிலாட்டம்**

நேர்காணல் - கலைமாமணி பொ.கைலாசமூர்த்தி

சந்திப்பு – முத்தாலங்குறிச்சி காமராசு

அடிவயிற்றிலிருந்து குரலெடுத்து ஒருவர் பாட, அவருடன் சேர்ந்து இருவர் பின்பாட்டுபாட, அதே மேடையில் ஆறுஆண்கள் ,மூன்று பெண்கள்சிவப்பு, மஞ்சள்துண்டைக் கைகளில் பிடித்துச் சுழற்றியபடி சுழன்றுசுழன்று ஒயிலாக ஆடவது தான் ஒயிலாட்டம்.

ஒயிலாட்டம் ஆந்திராவிலிருந்து வந்தது என்கிறார் கைலாசமூர்த்தி. காட்சிப்பொருளாக இல்லாமல் மக்கள் வாழ்க்கையோடு இணைந்து வாழ்க்கை முறையைக் கற்றுக்கொடுத்து மக்களோடு மக்களாகக் காலங்காலமாக வாழும் கலை தான் ஓயில்கும்மி. இந்தக் கும்மிஆட்டம் தமிழகத்தில் பலபகுதியிலும், பல்வேறு பெயர்களிலும் அழைக்கப்படுகின்றன. பொழுதுபோக்கு அம்சங்கள் அதிகம் இல்லாதபோது, வேலை செய்த களைப்பில் வரும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொழுதுபோக்காக இருந்தது கும்மியாட்டம் என்கிறார் கைலாசமூர்த்தி.[10]

“ஒயிலாட்டத்தில் சத்தமாகப் பாடுவதால் குரல் தெளிவாகிறது. வளைந்து குனிந்து ஆடவதால் உடல் களைப்பு மறைகிறது.அத்துடன் தேவையற்ற கொழுப்புகள் உடலில் தங்காமல் “அழகிய வடிவம் கிடைக்கிறது. ஒயிலாட்டக்கலைஞர்களுக்கு நீரழிவு, இரத்தஅழுத்தம் போன்ற நோய்கள் வராது“[11] என்று கைலாசமூர்த்தி மனிதர்கள் வாழ்வியலோடு ஓயிலாட்டக்கலையை இணைத்துக் குறிப்பிடுகிறார்.

ஒயில்கும்மிபாடல்மெட்டில், 1982 – இல் களக்காடு கிராமம் நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியரின் பணியிடை நீக்க வரலாற்றை ஒரு நீண்ட பாடலாக அமைக்கின்றார் கைலாசமூர்த்தி.

“அநியாத்தைப் பாருங்கம்மா – அத
அதட்டிக் கேக்க வாருங்கம்மா“

என்று மக்களை அழைக்கின்றார். பதவி நீக்கப்பட்ட தலைமையாசிரியரின் அவலநிலையை,

“சம்சாரம் போட்டிருந்த
சங்கிலியைத் தானும் வித்தாரு
அத்தனையும் வித்துப்போட்டு
அத்தன கோர்ட்டுக்கும் போய் வந்தாரு“

என்றுபாடி, பொதுமக்களைப் பார்த்து,

நீங்க ஒதுங்கி நின்னா நியாயம் தானா
ஓடிஓடி வாருங்கம்மா இந்த
போராட்டத்தில் சேருங்கம்மா"

என்று அழைத்ததனால், அந்தப் போராட்டம் ஒயில்கும்மியினால் மக்கள் இயக்கமாக மாறிய தன் விளைவாக, அரசு தன் பெயரைக் காப்பாற்றிக் கொள்ள அப்பள்ளியின் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டு பணியிடை நீக்கம் செய்யப்பட்ட தலைமையாசிரியருக்கும் பணிவழங்கியது.[12]

பொ.கைலாசமூர்த்தி தூத்துக்குடி மாவட்ட மகளிர் மேம்பாட்டு திட்ட அலுவலகத்தில் கணக்கராகப் பணியாற்றி 2004 - ஆம் ஆண்டு மேமாதம் ஓய்வு பெற்ற பிறகு சமுதாயத்தில் புரையோடிப் போயிருக்கும் தீமைகளை விமர்சிக்க ஒயில் கும்மியாட்டக்கலையையே தன்னுடைய ஆயுதமாகப் பயன்படுத்தத் தீர்மானிக்கின்றார். பாட்டு, ஆட்டம், கதை ஆகிய மூன்றும் கலந்த கிராமியக்கலையான ஒயிலாட்டம் கிராமமக்களைக் கவர்ந்து இழுக்கும் என்ற நம்பிக்கையில் தியாகம் நிறைந்த வீரவரலாறுகளை மக்களுக்கு நினைவுபடுத்தும் வகையில் வ.உ.சி.யின் சுதேசிகப்பல் பயணித்த நூற்றாண்டுவிழா, வாஞ்சி நினைவு நூற்றாண்டு விழா ஆகியவற்றைப் பொதுமக்கள் மத்தியில்நடத்தினார்.[13]

இத்தகைய சிறப்பு வாய்ந்த ஒயிலாட்டக்கலை, தொலைக்காட்சி வரவால் மக்களிடையே வரவேற்பினைப் பெறாமல்போய்விட்டது .பாவைகூத்து, களியலாட்டம், தாலாட்டு, ஒப்பாரி, என்று வாழ்க்கையே பாடல்களாக அமைந்தநிலையில் இன்று அனைத்தும் மாறிப்போனது. சான்றாக மீன்பிடிப்பதற்கு நாட்டுப்படகில் செல்பவர்கள், உடல் வலிதெரியாமல் இருப்பதற்காக "அம்பா" பாடல்களைப் பாடிச்செல்வார்கள். ஆனால்தற்காலத்தில் இயந்திரப்படகில் மீன்பிடிக்க செல்வதால் அம்பாபாடல்கள் அழிவுநிலைக்குச் சென்றுவிட்டது என்கிறார் கைலாசமூர்த்தி.[14]

கலைமாமணி கைலாசமூர்த்தி, நமது பண்பாடுகளை விளக்கும்நாட்டுப்புறக்கலைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையில் விருதுகளை அரசு வழங்க வேண்டும். கல்லூரிகளில் ஒயிலாட்டம் குறித்து கெஸ்ட் லெக்சர் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். கர்நாடக மாநிலம் நாட்டுப்புறகலைகளுக்கென ஒரு பல்கலைக்கழகம் தொடங்கியதைப் போன்று தமிழ்நாடு அரசும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அரசுக்கு வேண்டுகோள் விடுக்கின்றனர்.[15]

முடிவுரை

காவடியாட்டம், ஒயில்கும்மியாட்டம் என்ற இரண்டு கலைகளும் விஞ்ஞான வளர்ச்சியினாலும் மக்கள் நாகரிக மோகத்தினாலும் அழிவு நிலையை நோக்கிச் செல்கின்றன. இதனால் அந்தக்கலைகளால் போற்றப்பட்ட பண்பாடு சார்ந்த வாழ்க்கை நிலைமாறி அமைகின்றது என்பதைச்சங்கரபாண்டித்தேவர், கைலாசமூர்த்தி இரண்டு கலைஞர்களின் நேர்காணல் மூலம் அறியமுடிகிறது .

அடிக்குறிப்பு

1. Merriam Webster Dictionary, Interview, Dictionary Definition

2. The Oxford English Dictionary,

3. தொ.பரமசிவன் – நேர்காணல்கள், காலச்சுவடுபப்ளிகேஷன்ஸ்(பி) லிட்
4. முற்குறிப்பிட்ட நூல் முன்னுரை – பக்கம் 11
5. பவுத்தஅய்யனார், அலையும்நினைவுகள் பின்பக்க அட்டை
6. முத்தாலங்குறிச்சிகாமராசு, நெல்லைநாட்டுப்புறகலைஞர்கள்- பக்
7. முற்குறிப்பிட்ட நூல் பக்-6-7
8. முற்குறிப்பிட்ட நூல் பக் – 11
9. முற்குறிப்பிட்ட நூல் பக்- 17-18
10. முற்குறிப்பிட்ட நூல் பக்- 60-61
11. முற்குறிப்பிட்ட நூல் பக்-62
12. முற்குறிப்பிட்ட நூல் பக்-62 - 63
13. முற்குறிப்பிட்ட நூல் பக்-66 – 67
14. முற்குறிப்பிட்ட நூல் பக்-69 – 70
15. முற்குறிப்பிட்ட நூல் பக்-72

துணைநூற்பட்டியல்

1. முத்தாலங்குறிச்சிகாமராசு, நெல்லைநாட்டுப்புறகலைஞர்கள் வெளியீடு – காவ்யாபதிப்பகம்சென்னை -24 முதல்பதிப்பு ,2013
2. தொ.பரமசிவன் – நேர்காணல்கள், காலச்சுவடுபப்ளிகேஷன்ஸ்(பி) லிட் – மூன்றாட்பதிப்புபிப்ரவரி 2021
3. பவுத்தஅய்யனார், அலையும்நினைவுகள் (நேர்காணல்கள் ), மீனாள்பப்ளிஷிங்ஹவுஸ் – சென்னை -103 முதல்பதிப்பு , டிசம்பர் 2010
4. Merriam Webster Dictionary, Interview, Dictionary Definition, Retrived February16>2016
5. The Oxford English Dictionary, Second Edition, 1989